Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**STC.No. 494/2024**

**Deposition of PW.1 (LW.1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரபாகரன் | ஜாதி | : | |
| த/பெ | : | முருகன் | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | நடுப்பட்டி, இந்திராபுரம் | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 34/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.02.2026.

(எதிரி ஆஜர் )

**அரசு தரப்பு மறு விசாரணை**

நான் நடுப்பட்டி, இந்திராபுரத்தில் குடியிருந்துகொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். சம்பவ தினத்தன்று எனது இருசக்கர வாகனத்தின் மீது மோதிய அரசு பேருந்தை ஓட்டிவந்த ஓட்டுநரை சம்பவ தினத்தன்று பார்த்தேன். அவர் தான் ஆஜர் எதிரி. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

உங்கள் இருசக்கர வாகனத்தின் மீது மோதிய பேருந்தின் பதிவெண் தெரியுமா என்றால் தெரியாது. வாகன விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநர் பெயர் தெரியாது. போலிசார் சொன்னதன் பேரில் தெரிந்துகொண்டீர்கள் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்ற போது தலைகவசம் அணியவில்லை என்றால் சரிதான். நீங்கள் வாகனத்தை முந்திச்செல்லும் போது இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நீங்கள் அரசு மருத்துவமனையில் எத்தனை நாட்கள் சிகிச்சை பெற்று, எந்த தேதியில் டிஸ்சார்ஜ் ஆனீர்கள் என்றால் 10.10.2023 அன்று காலையில் 09.00 மணிக்கு சிகிச்சைக்காக சேர்ந்து மதியம் 02.00 மணிக்கு டிஸ்சார்ஜ் ஆகிவிட்டேன்.

மேல் சிகிச்சைக்காக எந்த மருத்துவமனைக்கு சென்றீர்கள் என்றால் திண்டுக்கல் சிட்டி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன். எந்த தேதியில் சிகிச்சையை முடித்தேன் என்று எனக்கு நியாபகமில்லை. நீங்கள் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றும், போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**STC.No. 494/2024**

**Deposition of PW.4 (LW.4)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயக்குமார் | ஜாதி | : | |
| த/பெ | : | சந்தனம் | தொழில் | : | கறி கடை வைத்துள்ளேன். |
| கிராமம் | : | செம்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 33/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.02.2026.

(எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை**

நான் செம்பட்டியில் குடியிருந்துகொண்டு கறிக்கடை வைத்து நடத்தி வருகிறேன். கடநத் 10.10.2023 ஆம் தேதி காலை சுமார் 09.30-10.00 மணிக்குள் நான் எனது கறிக்கடையில் வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது, செம்பட்டியில் இருந்து திண்டுக்கல்லுக்கு அரசு பேருந்து சென்றுகொண்டிருந்தது. அப்போது எனது கடை முன்பு செம்பட்டியை நோக்கி இருசக்கர வாகனத்தில் வந்த நபர் மீது அந்த அரசு பேருந்துக்கு முன்னால் சென்ற பேருந்தை முந்துவதற்காக கடக்க முயற்ச்சித்த போது அந்த இருசக்கர வாகனத்தில் வந்த நபர் மீது அந்த அரசு பேருந்து மோதியதில் அவருக்கு வலது முட்டிக்கு கீழ் காயம் ஏற்பட்டது. நான் சம்பவத்தை நேரடியாக பார்த்துவிட்டு காயம்பட்ட நபரை 108 ஆம்புலன்சில் ஏற்றி அனுப்பி வைத்தேன். அந்த வாகன விபத்து ஏற்படுத்திய அரசு பேருந்தை ஓட்டி வந்த ஓட்டுநரை விபத்து நடந்தபோது நான் பார்த்தேன். அவர் தான் ஆஜர் எதிரி. (அவர் மாதிரி தான் இருந்தது என்று சாட்சியம் அளித்தார்) வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நீங்கள் வைத்திருக்கும் கோழிக்கடை ஆஸ்பத்திரிக்கும், ரோட்டிற்கும் மேற்குப்பக்கம் என்றால் சரிதான். அதிக போக்குவரத்து உள்ள ரோடு என்பதால் ரோட்டில் வாகனங்கள் செல்லும் போது ரோட்டின் கிழக்கு பக்கத்தில் உள்ள சம்பவங்களை நேரடியாக உங்களால் கடையிலிருந்து பார்க்கமுடியாது என்றால் சரியல்ல, பார்க்க முடியும். போலிசார் விசாரணையில் விபத்தை ஏற்படுத்திய பேருந்தின் வாகன எண், ஓட்டுநர் பெயர், இருசக்கர வாகன எண் போன்ற விபரங்களை நீங்கள் குறிப்பிட்டு

சொல்லவில்லை என்றால் சரிதான். முன்னால் சென்ற வாகனத்தை இருசக்கர வாகனத்தில் வந்தவர் முந்தி செல்ல முயன்ற போது எதிரே வந்த வாகனத்தில் மோதி விபத்தை தானக ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. ரவுண்டானாவை தாண்டி வரும் வாகனங்கள் வேகமாக வரமுடியாது என்றால் சரியல்ல. வாகனங்கள் வெளியே வரும் போது தான் வேகமாக வருகிறது. விபத்து நடந்தது எந்த கிழமை என்றால் ஞாபகமில்லை.

உங்களுடைய கடைக்கு தென்புறத்தில் மற்ற கடைகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடம் பொதுமக்கள் அதிகமாக நடமாட்டம் உள்ள இடம் என்றால் சரிதான். பொதுமக்கள் நடமாட்டம் அதிகமுள்ள இடத்தில் வாகனம் வேகமாக செல்ல முடியாது என்றால் சரிதான். அந்த இடத்தில் பொதுமக்கள் இல்லை. உங்கள் கறிக்கடை உயரமான பகுதி, மேடாக அமையவில்லை என்றால் சரிதான். இந்த விபத்து யாருடைய தவறால் ஏற்பட்டது என்று உங்களுக்கு தெரியாது என்றும், போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor